நாவிதன்வெளி பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவிதன்வெளி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவிதன்வெளி பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை 1.2(அ)(v),(vi),(vii) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபையின் பயன்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 99,930 பெறுமதியான 16 வகையான சிறு பொருட்கள் நிலையான சொத்துக்கள் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.	01 வருடத்துக்கு மேற்பட்ட நீடிய வாழ்க்கை தன்மையினை யுடைய சிறு பொருட்கள் நிலையான சொத்தக்களின் பட்டியலில் காட்டப்பட்டுள்ளது	சிறிய பொருட்கள் நீக்கி பொருத்தமான பொருட்களை நிலையான சொத்து சீர்செய்யப்பட வேண்டும்
(ஆ)	மீளாய்வாண்டில் சபையின் பொது நூலகம் மற்றும் பொதுச் சந்தை புனர்நிர்மானம் செய்வதற்காக ரூபா 749,220 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், அத் தொகையானது நிதிக்கூற்றுக்களில் காணிகட்டிடக் கணக்கில் கூட்டிக் காட்டப்பட்டிருக்கவில்லை.	தவறுதலாக கணக்குகளில் காட்டப்பட்டதனை எதிர்வரும் நிதியாண்டில் கணக்குகளில் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	உரிய ஆண்டுக்கான செலவு அதே ஆண்டுக்கணக்கில் பதிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான வாகனங்களாகிய பெக்கோ லோடர், 10 Ton ரோலர், சிறிய ரோலர், ரோலர் கட்டர்பில்லர், டிறக்டர், நீர்த்தாங்கி, இழுவைப் பெட்டி என்பவைகளின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு முன்கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.	வாகனங்களின் மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது அவை கிடைத்தவுடன் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்	மதிப்பீட்டினை மேற்கொண்டு உரிய கணக்குகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்
(ஈ)	2021 ஆம் ஆண்டில் ரூபா 4,598,924 பெறுமதியில் பூர்த்தியாக்கப்பட்ட சவளைக்கடை பொது விளையாட்டு மைதான சுற்றுமதிலின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	ஆவசரத்தன்மையினால் கணக்கறிக்கையில் தவறுதலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது	ஊரிய சொத்துக்கணக்கில் சேர்க்க நடவடிக்கை

		எதிர்வரும் நிதியாண்டில் சேர்த்துக்கொள்ளப்படும்.	எடுக்கப்பட வேண்டும்
(உ)	2021/2022 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற உபகரணங்கள் மற்றும் புத்தகங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரை	சிபார்சு
1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின்			
(i) 128 பிரிவு	சபையில் பயன்படுத்தப்படும் ஆதனங்களினை அடையாளம் கண்டு அவற்றின் உரிமையினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆதனங்கள் அடையாளம் கண்டு அவற்றினை சபையின் பெயரில் மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படு கின்றது.	சபையின் ஆதனங்களின் உரிமையை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.
(ii) 134 பிரிவு	அதிகார எல்லையினுள் அமைந்துள்ள வருமான மூலங்களை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள முன்னேற்ற பகுதிகளை இனம் கண்டு வருமான மூலங்களை இனங்கண்டு கொள்வதற்கான நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுக்கி ன்றது	வருமான மூலங்களை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்			

(i)	இலக்கம் 5(xii) விதி	காசு, களஞ்சிய பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள 03 உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான பிணைப்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்பொழுது பிணைப்பணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	நிதி, நிருவாக விதிக்கிணங்க பிணைப்பணம் பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
(ii)	இலக்கம் 218 விதி	சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு வருடமும் ஒரு முறையேனும் பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அதற்குரிய ஆவணங்கள் காணப்படாத காரணத்தினால் கணக்காய்வுக்கு சமாப்பிக்கப்பட வில்லை	காணி கட்டட பரிட்சிப்பு ஆவணங்களினை பெற்று கணக்காய்வுக்கு சமாப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,084,935 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 6,940,497 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	-	-	-	-	-	-	-	-
(ii)	வாடகை	5,230,000	5,302,000	4,146,725	1,155,275	4,475,000	3,363,347	3,607,437	1,058,675
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	1,015,000	1,038,100	1,038,100	-	790,000	874,900	874,900	-
(iv)	ஏனைய வருமானம்	3,317,500	1,888,634	1,871,066	17,568	3,017,500	1,451,179	1,469,018	19,640
	கூட்டுத் தொகை	9,562,500	8,228,734	7,055,891	1,172,843	8,282,500	5,689,426	5,951,355	1,078,315

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	வாடகைதார்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை ரூபா 1,050,595 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2007-2022 வரையிலான நிலுவைகள் தொடர்பாக இணக்க சபைகளின் தீர்மானத்தின் அடிப்படையில் சில நிலுவைதாரர்கள் தங்களில் நிலுவைகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள 05 கடையறைகள் மற்றும் சவளக்கடையிலுள்ள 03 கடையறைகள் கடந்த 05 வருடங்களுக்கு மேலாக வாடகைக்கு விடப்படாததினால் சபைக்கு அண்ணளவாக ரூபா 2,400,000 வருமான வாடகை இழக்கப்படுகின்றன.	இரண்டு தற்பொழுது வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய கடையறைகளினை வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	கடையறை யினை வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்
(இ)	525 வியாபார நிலையங்களிற்கு ரூபா 1,015,000 பெறுமதியான வருடாந்த வியாபார அனுமதிப் பத்திரங்களுக்காக மீளாய்வாண்டில் பட்டில்படுத்தப்பட்டிருப்பினும், 338 வியாபார அனுமதிப் பத்திரங்களுக்கு மாத்திரம் ரூபா 902,100 அறவிடப்பட்டிருந்தன.	இயங்காத கடைகளினை இனங்கண்டு அவற்றினை எமது பதிவேட்டிலிருந்து அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது டன் ஏனைய கடைகள் தொடர்பான நிலுவைகளை தண்டத்துடன் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	காலத்திற்கேற்ப இற்றைப்படுத்தி வியாபார அனுமதிக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஈ)	2024 ஆனி – மார்கழி வரையான காலப்பகுதிக்கான முத்திரைக் கட்டணங்கள் உரிய காலப்பகுதிகளில் கணிப்பீடு செய்யப்பட்டு கோரிப் பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டுக்கான தை - வைகாசி மாதம் வரையிலுமான படிவங்களை பதிவாளர் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டுள்ளதுடன் மீதியை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது	முத்திரைக்கட்டணத்தினை உரிய காலப்பகுதியில் கோரி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
உக்கக்கூடிய கழிவுகளைக் கொண்டு சேதனப்பசளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட செயற்பாட்டினை முன்னெடுத்து செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	சேதனப்பசளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபையில் நீர் இணைப்பு பெறுவதற்காக பொதுமக்களினால் வீதிகள் வெட்டப்படுகின்ற போது, அவற்றினை சீர் செய்து தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் ரூபா 296,500 க்கு 527 இடங்களில் வீதிகள் வெட்டப்பட்டும் அவை சீர்செய்யப்பட்டது தொடர்பாக எதுவித ஆவணமும் காணப்படவில்லை.	நீரினைப்பினை பெறும்போது வீதி திருத்தத்திற்காக சபையினால் நிதி அறவிடப்படுவதுடன் திருத்தமும் மேற்கொள்ளப்படுகின்றது. இருந்தும் தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்பட வில்லை	வீதி திருத்தங்கள் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் உறுதிபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	சபையினால் நிர்மாணிப்பு வேலைகளுக்காக 05 ஒப்பந்தாரர்களுக்கு கூட்டு மொத்தமாக ரூபா 5,970,660 பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருப்பினும், அதன் பிரதிகள் கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படவில்லை.	துற்போது ஒப்பந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் விபரங்கள் கணக்காய்வாளர் அதிபதிக்கும் இறைவரி திணைக்களத்துக்கும் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது	பெறுமதிசேர் வரி தொடர்பாக கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(இ)	பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட அரச காணியினை அளவை செய்வதற்காக இலங்கை நில அளவை திணைக்களத்திற்கு ரூபா 34,500 முற்பணமாக 2023 பெப்ரவரி 22 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும், அக் கொடுப்பனவுக்கான நில அளவைப் படத்தினை பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்ட நிலமானது நில அளவை திணைக்களத்தினால் அளவை செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான வரைபடமும் கிடைக்கப்பெற்றுள்ளது. இருந்தும் குறிப்பிட்ட நிலம் தொடர்பாக எல்லைப் பிரச்சினை காணப்படுவதினால் தற்பொழுது விசாரணை குழு அமைக்கப்பட்டு பிரதேச செயலாளரினால் குறிப்பிட்ட நிலத்தின் எல்லை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.	நில அளவை தொடர்பான பிரச்சினையை சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபையினால் 2021 ஆம் ஆண்டில் ரூபா 671,000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட சேதகப் பசளை தயாரிக்கும் இயந்திரம் கணக்காய்வுத் திகதி வரை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் பாவனையற்று காணப்படுகின்றது.	குறித்த இயந்திரமானது பழுதடைந்ததுள்ளது. இதன் காரணமாக குறித்த இயந்திரத்தின் பாதுகாப்பின் நிமித்தம் தற்காலிகமாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சேதனைப்பசளை உற்பத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்	உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்
(ஆ)	சபையின் எல்லைக்குட்பட்ட கட்டிட அனுமதி பெறப்படாத கட்டிடங்களினை இனங்கண்டு அக் கட்டிடங்களின் மீது தண்டப்பணம் அறவிட நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தற்பொழுது குறிப்பிட்ட விடயங்களை மேற்பார்வை செய்வதற்கு இரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	அனுமதி பெறாத கட்டங்களுக்கு தண்டபணம் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதி வரை சபைகுச் சொந்தமான காணி கட்டிடங்களின் மொத்தக் கூட்டுப் பெறுமதி ரூபா 223,640,056 கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும் அவை சொத்துப் பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை	காணி கட்டடம் தொடர்பாக முறையான நிலையான சொத்து பதிவேடு எமது சபையில் காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட சொத்தின் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதில் காணப்படும் சிக்கல் நிலை (உறுதி) காரணமாக குறிப்பிட்ட பதிவேட்டினை இற்றைப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.	காணி கட்டடம் இற்றைப்படுத்தப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	சபையினால் 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் மாதம் வரை சபையினால் நாளாந்தம் காசாக பெறப்பட்டிருந்த வருமானங்களில் வங்கியில் வைப்புச் செய்யப்படாத ரூபா 300 தொடக்கம் ரூபா 75,000 வரையான காசு கையிருப்பாக	குறிப்பிட்ட நாளில் பிப.02 மணி மற்றும் முதல் நாளில் 02 மணிக்கு பின் கிடைக்கும் வருமானங்கள் அனைத்தும் குறிப்பிட்ட நாளில் வங்கியில்	உடனடியாக பாதுகாப்பு பெட்டகத்தினை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	காசாளரிடம் காணப்பட்டிருந்தும், நிதிப் பிரமாணத்தின் பிரிவு 315 மற்றும் 316 இன் பிரகாரம் அரசாங்க பணத்தினை பாதுகாப்பதற்கு காப்புப் பெட்டகம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வைப்பிலிடுவது வழமை மேலும் குறிப்பிட்ட நாளில் பிற்பகலில் அதாவது 02 மணிக்கு பின் கிடைக்கும் வருமானங்கள் வங்கியில் வைப்பிலிட முடியாத காரணத்தினால் காசாளரிடம் காணப்படும் .தற்பொழுது குறிப்பிட்ட பாதுகாப்பு பெட்டகத்தினை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது	
(இ)	சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களில் 08 வாகனங்கள் சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அனைத்து வாகனங்களையும் சபையின் பெயரில் மாற்றுவதற்கான படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளது	வாகன உரிமை மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	சபையினால் பயன்படுத்தப்படும் 07 வாகனங்களுக்கு 30/2016 ஆம் இலக்கமும் 2016 திசெம்பர் 29 ஆந் திகதியும் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தற்பொழுது உரிய வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை அறிக்கை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(உ)	பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட 11 நீர்த்தாங்கிகள் இருப்புப் பதிவேட்டில் பதியப்படாமல் காணப்படுகின்றன.	குறிப்பிட்ட நீாத்தாங்கிகளை இருப்பு பதிடிவேட்டு புத்தகத்தில் பதிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டள்ளது.	நீர்த்தாங்கிக ளின் பெறுமதிகளை இருப்பு பதிவேட்டில் பதிவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	LDSP திட்டத்தின் கீழ் ரூபா 2,795,000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட நெல்குற்றும் இயந்திரமானது ஒவ்வொரு பாகங்களாக உரிய முறைப்படி இருப்பு பதிவேட்டில் பதியப்படாது ஒரு உருப்படி எனப் பதியப்பட்டிருந்தது.	பதில் தரப்படவில்லை.	நெல்குற்றும் இயந்திரத்தின் ஒவ்வொரு பாகங்களையும் உரிய முறைப்படி இருப்பு பதிவேட்டில் பதிவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ரூபா 9,275,865 க்கு நிர்மாணிக்கப்பட்ட 05 பொதுச் சந்தைகள் பொது மக்கள் புழக்கமற்ற கைவிடப்பட்ட	குறிப்பிட்ட சந்தைகளினை இயங்க வைக்கும் முகமாக எமது சபையினால் பல	மாற்று பயன்பாட்டின் மூலம் வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

	வயல் நிலங்களில் காணப்பட்டமையினால் அவைகளை பொது மக்கள் பயன்படுத்த முடியாமல் பயன்பாடற்று காணப்பட்டிருந்தன.	செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது	
(ஏ)	அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் நிர்மாணிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 ஆன திண்மக் கழிவகற்றல் நிலையமானது உரிய சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளாததனால் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற இடத்தில் காணப்படுவதுடன், இதுவரை மாற்றுப் பயன்பாடுகளுமின்றி காணப்படுகின்றது.	ஊரிய இடம் பொதுமக்கள் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டுள்ளது.	தவறுகளை சீர்செய்து உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
(அ)	சவளைக்கடை பல் தேவைக்கட்டிடம் நிலை III இல் சில இடங்களில் Tile ஒட்டுவதற்கான சுடழ் (Tile Grout) சீராக இடப்படாமல் காணப்படுகின்றன.	ஏங்களின் கள விஜயத்தின்போது பல்வேறு குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டது. சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்	சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 07 வட்டாரங்களும் 20 கிராம சேவகர் பிரிவுகளும் காணப்பட்டிருந்தும், ஒரே ஒரு நூலகம் மாத்திரமே காணப்படுகின்றன. அத்துடன் அதுவும் பொது மக்களுக்கு பொருத்தமற்ற இடத்தில் அமைவிடத்தினை கொண்டுள்ளதனால் அதன் பயன்பாடு மந்த கதியாக காணப்படுகின்றன.	குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கூடிய கவனம் எடுத்து செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	பொது நூலகத்தினை பயன்பாடுடையதாக மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க மற்றும் திருத்திய 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 02/2018(1) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், சபையினால் 2024 ஆம் ஆண்டுக்கான மனிதவள அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்து மனித வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்பொழுது மனிதவள திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறையிலுள்ளது.	மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	சபையின் செயலாளர் பதவிக்கு ஒரு பொருத்தமானவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	பிரதான பதவி வெற்றிடங்க ளினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திட்ட அறிக்கையானது எம்மால் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துகின்ற போது அதற்கான நிதி ஏற்பாடுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய தேவைப்பாடானது காணப்படுகின்றது.	2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின் படி நிலைபெறா அபிவிருத்தி இலக்குகளை அடைய நிதி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டு காலப்பகுதியில் 20 வணிகங்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை புதுப்பிக்காமல் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.	உரிமத்தை புதுப்பிக்குமாறு கோரி நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து புதுப்பிக்க தவறும் பட்சத்தில் அவர்களுக்கெ திராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபையின் எல்லையில் பொருத்தமான இடத்தினை திண்மக்கழிவு கொட்டுவதற்கு தெரிவு செய்யப்படாததினால், பொது மக்களிடமிருந்து மாதாந்தம் 129 டொன் கழிவுகள் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் கழிவு சேகரிப்பு மத்திய நிலையத்திற்கு ரூபா 44,397 வழங்கப்படுகின்றது.	எதிர்வரும் காலத்தில் சேகரிக்கப்படும் திணம கழிவுகளை பயன்படுத்தி தேன பசளை தயாரிக்க திட்டம் ஏற்படுத்தப்படும்	தேன பசளை தயாரிக்க திட்டம் மொன்று மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	சேதனப் பசளை தயாரிப்புக்களான எதுவித முன் நடவடிக்கைகளுமின்றி மீளாய்வாண்டில் 23 ஊழியர்களுக்கு அது தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டிருந்தது.	எதிர்வரும் காலத்தில் சேதனை பசளை தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது.	உரிய நோக்கத்தினை அடைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்